30th July 1962]

Fair price shops.

6 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to place a statement on the table of the House showing.—

(*a*) **the number of fair price shops opened district-war ;**

(*b*) **the total quantity of rice distributed so far through them ;**

(*c*) **the price at which rice is being sold at present ?**

A.—(*a*) the number of fair price shops opened district-war is as shown below :

	District.	Number of shops.
1	Madras	98
2	Chingleput	62
3	Coimbatore	54
4	North Arcot	36
5	South Arcot	35
6	Salem	51
7	Madurai	11
8	Ramanathapuram	79
9	Thanjavur	12
10	Tiruchirappalli	11
11	Tirunelveli	75
12	Kanyakumari	20
13	The Nilgiris	70
	Total	614

(*b*) **69,934 tons of rice upto the end of May 1962.**

(c) the price of rice in fair price shops ranges from 71 nP. per Madras Measure for Burma Rice which is the variety mostly sold.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

II.—PRIVILEGE MATTER *RE* INCORRECT REPORT PUBLISHED IN 'DINATHANTHI'.

MR. SPEAKER : The Hon. Minister for Finance has given notice of a privilege matter.

*** கனம் திரு எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, நேற்று முன்தினம் சிறையிலே நடந்த சில சம்பவங்களைப்பற்றி சில கனம் அங்கத்தினர்கள் கேட்டார்கள். அதைப்பற்றி நான் நிலைமையை விளக்கினேன். அதற்கு முன்பும் ஒரு பத்திரிகையிலே வந்த செய்தியைப் பற்றி குறிப்பிடப்பட்டது. அப்போதும் நான் நிலைமையை விளக்கியிருக்கிறேன். அந்தப் பத்திரிகை ஆசிரியர் அவர்கள்கூட தவறுதலாகச் செய்தி வெளிவந்ததற்கு வருத்தம் தெரிவித்தார்கள். போலீசார் அங்கே செல்லவே இல்லை என்று உறுதியாக நேற்று முன்தினம் கூறினேன். ஆனால், அந்தச் செய்தியை வெளியிடுவதில், 'தினத் தந்தி' பத்திரிகை "போலீசார் சிறைக்குள்ளே சென்றதாகவும்", "சென்று தடியால்

அடித்தது தெரிந்ததே" என்றும், நான் சொன்னதைத் திரித்துப் போட்டு, நான் அவ்விஷயத்தை ஒப்புக்கொண்ட மாதிரி வெளியிட்டிருக்கிறார்கள். நான் கொடுத்த பதிலிலே இவ்வளவு தூரம் விளக்கிய பிறகும், "போலீசார் தடியால் அடித்தார்கள் என்பது தெரிந்ததே" என்று போட்டிருக்கின்றார்கள். இதைப்பற்றி தங்களுடைய பார்வைக்கு கடிதம் கொடுத்திருக்கிறேன். இது ஒரு உரிமைப்பிரச்சனையாகும். இதை உரிமைக் கமிட்டிக்கு விட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

Mr. SPEAKER: Does the leader of any of the opposition parties want to speak on this matter?

திரு. மீ. கலியாணசுந்தரம்: நான் இன்று காலைதான் வந்தேன். பேப்பர் பார்க்கவில்லை. அங்கத்தினராக இருந்தாலும், அமைச்சராக இருந்தாலும் இந்தச் சபையின் நடவடிக்கைகளை வெளியிடும்போது, எந்தப் பத்திரிகையாக இருந்தாலும் அதைத் திரித்துக் கூறுவதாக இருந்தால் அது தவறாகத்தான் இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம். எப்படியிருந்தாலும் உரிமைப் பிரச்னை கமிட்டி பரிசீலனை செய்தபிறகுதான் முடிவெடுக்கப் போகிறோம். உடனே குற்றம் என்று சொல்லிவிடப் போவதில்லை. அதனால் உரிமைக் கமிட்டி பரிசீலனை செய்வதிலே எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை.

* **திரு சா. கணேசன்**: நானும் இப்போதுதான் வந்தேன். அதனாலே பத்திரிகையைப் பார்க்கவே இல்லை.

Mr. SPEAKER: There is no point of personal explanation. The matter before the House is about privilege.

திரு. சா. கணேசன்: என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதற்குமுன் நான் குறிப்பிட்ட பேப்பரைப் பார்க்கவில்லை . . . (குறுக்கீடு) அப்படி பார்க்காத ஒரு நிலையிலேயே என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்கின்றேன் என்பதைத் தெரிவிப்பதற்காகத்தான் அப்படிச் சொன்னேன்.

எந்தப் பத்திரிகையாக இருந்தாலும் சரி நடந்ததை நடக்கவில்லை என்றோ, நடவாததை நடந்தது என்றோ போடுவது ஒழுங்கில்லை என்பது மட்டுமல்ல. உண்மையைப் போட்டாலும்கூட, தரக் குறைவாகவோ கண்ணியக்குறைவாகவோ, தீமை பயப்பதாகவோ இருக்கும்படி எழுத வேண்டிய அவசியமில்லை. இந்த நிலைமையிலே கனம் சபை முதல்வர் அவர்கள் தங்களுடைய கருத்தைத் தெரிவித்தார்கள். அப்படி இருக்குமானால், அது முற்றிலும் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படத்தக்க ஒன்றாகும். அதை உரிமைக் கமிட்டிக்கு சமர்ப்பிப்பது நியாயமும், பொருத்தமுமாக இருக்கும் என்பது தான் என்னுடைய கருத்தாகும்.

Mr. SPEAKER: I will now read the letter of the Hon. Minister addressed to me.

30th July 1962]

'Dear Mr. Speaker,

I would like to refer you to a report published in the Tamil Daily 'Dinathanthi' of this morning's (29th July 1962) issue of what I stated in the Assembly on the 28th about incidents in the Madras Penitentiary. I categorically stated in the Assembly on a previous day, referring to a false report in another Daily that the Police had not stepped into the prison at all. The Editor of that Daily being a member of the House promptly admitted the incorrectness of the report and expressed regret. I stated again yesterday that the Police had no part in dealing with the disturbances within the Jail and only the convict-warders and regular staff of the Jail had to deal with the situation. If you will permit me, I would like to raise this as a matter of privilege.'

After hearing the speeches of the Hon. Minister as well as the leaders of the two Opposition parties . . .

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, the portions marked in the newspaper may also be read out to the House.

MR. SPEAKER: Yes, I will read that portion also.

சென்னை ஜெயிலில், தி.மு.கழக மறியலில் கைது செய்யப்பட்டவர்களுக்கும், ஜெயில் வார்டர்களுக்கும் 'மோதல்' ஏற்பட்டதும், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவரத்தில் போலீசார் தடியடி நடத்தியதும் தெரிந்ததே" என்று குறிப்பிடப்பட்டு இருக்கின்றது.

I find that there is a *prima facie* case. . . .

திரு. மீ. கலியாணசுந்தரம்: பத்திரிகையினுடைய தேதி என்ன?

கனம் சபாநாயகர்: ஜுலை 29-ம் தேதி.

MR. SPEAKER: I find that there is a *prima facie* case of breach of privilege to be investigated by the Committee of Privileges. I suggest to the Hon. Minister to move a Motion.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I move—

'That the matter of privilege raised by me be referred to the Committee of Privileges.'

MR. SPEAKER: The question is—

'That the matter of privilege raised by the Hon. the Minister for Finance be referred to the Committee of Privileges.'

The motion was put and carried.

III. POINT OF INFORMATION *re* ALLEGED TORTURE IN MADRAS CENTRAL JAIL.

SRI M. KALYANASUNDARAM: Sir, with your permission . . .